**செய்தி வெளியீடு எண்: 355** **நாள்: 04.06.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.6.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் சென்னை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கத்தில் 200 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு ஊழியர்களுக்கான 606 அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அனைத்து வசதிகளுடன் கூடிய புறநகர் மேம்பாட்டுத் திட்ட அடிப்படையில், மாநிலம் முழுவதும், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவு, மத்திய வருவாய்ப் பிரிவு மற்றும் உயர் வருவாய்ப் பிரிவு ஆகிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் முறையான திட்டமிட்ட மனைமேம்பாட்டு திட்டங்கள், வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கொண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், பழுதடைந்த தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளை இடித்து விட்டு, அதே இடங்களில் அதிக அரசு ஊழியர்கள் வீட்டுவசதி பெறும் வகையில், அதிக எண்ணிக்கையில் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளை கட்டி வருகிறது.

சென்னை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கத்தில் ஏற்கெனவே இருந்த அரசு ஊழியர்களுக்கான 126 அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் பழுதடைந்த காரணத்தினால், அக்குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் திட்டத்தின் கீழ், 200 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்த இடத்தில் அரசு ஊழியர்களுக்காக கட்டப்பட்டுள்ள 606 அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.6.2018**